உ

அம்பிகைக் கருமாரியம்மன் அருள்.

S. குப்புசாமி முதலியார்

அவர்களின்

நினைவு மலர்

முதலாண்டு நினைவு விழாவில்

சாதி கட்டடத் திறப்பு விழாவின்போது

(23—7—60) இல் வழங்கியது.

சமர்ப்பணம்

இந் நினைவு மலரை
திருவாளர் S. குப்புசாமி முதலியார்
அவர்கட்கு
சமர்ப்பணஞ்செய்கிறோம்.

வெளியிட்டோர் :

உ. ப. இரத்தினவேலு முதலியார்

அவர்கள்

S. கணேசம் அண்டு சன்,

வர்ண வியாபாரம்,

1/44, வெங்கடாசல முதலி தெரு, சென்னை-3.



திருவாளர் S. குப்புசாமி முதலியார்,
தர்மகர்த்தர் திருத்தணி ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி தேவஸ்தானம்.
உரிமையாளர் **S. குப்புசாமி & கோ.,**
(தி. பாபுலர் ஸ்பிரிட் ஸ்டோர்ஸ்) சென்னை-3.
கிளைகள் : பெங்களூர், வேலூர், விஜயவாடா & ஐதராபாத்.

91/1

உ

அம்மை—அருள்மயம்

சிவத்திரு S. குப்புசாமி முதலியார் அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு:

உயர் திரு S. குப்புசாமி முதலியார் அவர்கள் இந்நிலவுலகில் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு அவதரித்தார். ஐம்பது ஆண்டுகள் நம்மோடு இணங்கி நல்வாழ்வு வாழ்ந்தார். பல அறப்பணிகள் ஆற்றினர். தணிகை பெருமான் பணியைத் தலையாய பணியாகக் கருதி ஆற்றிவரும் நாளில் திடீரென உலக வாழ்வை துச்சமென நீத்து 1—8—1959 இல் திரு முருகப்பெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

என் பிரார்த்தனை:

"செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க நெருங்கிய உறவினர்களோடு மட்டுமல்லாமல், தூர உறவினர்களுடனும் மிக நெருங்கி பழகியும், அவரவர்களுக்கு ஆவன செய்தும், தம்மையடைந்தாரை வாழ்க்கைத்துறையில் மதிப்பு மிக்கவர்களாக ஆக்கியும் வைத்தார் என்று கூறினல் அது மிகையாகாது. அத்தகையாரின் பிரிவு எல்லோரையும் துன்பக்கடலில் ஆழ்த்திய தென்றல். உடனிருந்து அனுபவித்த வடமீன் அன்ன அவருடைய இல்லக் கிழத்தி யாரும், அரிய நன்மக்களும் ஆற்றெணுத்துயருறுவர் ஆயினும் அவர்கள் ஆறுதல் பெற்று உய்யவேண்டும் என்று முதன் முதலாக எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பிறப்பு:

இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, "சான்றோர் உடைத்து தொண்டை நாடு" என்ற சிறப்பு மிக்க நிலப்பகுதியிலே ஒரு பாலுள்ள பருத்திபுத்தூர் நல்லூரிலே திருவாளர். சோலை, சுப்பிராய முதலியாரும் அவர் தம் வீட்டரசியார் திருவாட்டி வள்ளி அம்மாளும் ஆற்றிய பெருந் தவத்தால் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற பொய்யாமொழிக் கொப்ப ஆண்மகவு ஒன்று ஈன்றனர். அம்மகவுதான் பிறகு பேரும் புகழுமாய் கூடிவாழ்ந்த உயர் திரு. S. குப்புசாமி முதலியார் அவர்கள் ஆவார்.

கால்கோள் :

திருவாளர் முதலியார் அவர்கள் 1921 ஆம் ஆண்டு தருமமிகு சென்னைமாநகரைச் சார்ந்தார். முன்னைய நல்வினையால், உயர்திரு ச. கணேச முதலியார் அவர்களும், அவரின் மாண்புமிக்க இல்லக்கிழத்தியார் திருவாட்டி. வள்ளியம்மாள் அவர்களும் ஒருங்கே சேர்ந்து நோக்கிய அருட்கண் நோக்கைப் பெற்ருர். அவ்வருட்கண்ணேக்கமே, அவர் வாழ்வைச் செம்மைப் படுத்தியது என்ருல் அது மிகையாகாது. திரு. ச. கணேச முதலியாரால்தான் வாணிபத் துறைக் கேற்ப பெற வேண்டிய பயிற்சி யாவும் பெற்ருர், "நல்லாசிரியரை யடுத்த நன்மாணவன்" போல பன்னிரண்டு ஆண்டுகள் திரு. முதலியாரிடமே தங்கி அவர் சொற் பிழை படாமலும், முறைவழுவாமலும் பணியாற்றியதே அதற்குத் தக்க சான்று என்பது. பின்னர், 1933-ஆம் ஆண்டில் தனக்கென ஒரு வாணிகத் துறையை அமைத்து கொண்டு அதில் பெரு முயற்சியோடு சிறந்த முறையில் வாணிபம் நடாத்தி, கண்ணேறு படத்தக்கப் பேரளவில் பொருள் ஈட்டினர். அறம்பல செய்தார். சென்னை லாயட்ஸ் பெருந் தெருவில் 67 - ஆம் எண்ணுள்ள "சரவண பவனம்" என்னும் திருமாளிகையைத் தோற்றுவித்து அம்மாளிகையில் வாழ்வாங்கு வாழ்ந்து பெறும் பேறும் பெற்ருர்.

இல்வாழ்க்கை :

திரு. முதலியார் அவர்கள் 1931-ஆம் ஆண்டு விரிஞ்சிபுரம் பெருந்தகையனர் திரு. கிருஷ்ணசாமி முதலியாரும், திருவாட்டி லோகாம்பாளும் முன்னைய நல்வினையாலீன்ற தவத்திரு மகளார் பங்கஜவல்லி அம்மையார் அவர்களை இனிது மணங்கொண்டார். "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை". என்ற வள்ளுவன் வாக்குக் கிணங்க இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றின் போய்ப் பெறுவதெவன்" என்னும் பொய்யில் மொழிக்கொப்ப அறத்தாறு கெடா வண்ணம் இல்லறத்தைச் செவ்வனே செய்யவும், "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" என்று கூறியபடி-பக்கத்துணையாக அவருக்கு அமைந்த வாழ்க்கைத் துணைநலமாகிய அம்மையாரையும் பாராட்டாதிருக்க முடியவில்லை. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்" முறை மிகச் சால சிறந்திருந்தது அவர்கள் இல்லமென்பது, கண்டோர் பலருக்கும் வெள்ளிடை மலையென விளங்கும்.

அவ்விருவிரும் ஒருங்கேயிருந்து வருவோரை அகமலர முகமலர வருவீர், வருவீர் என்றழைத்து அவர் தம் உள்ளம் குளிரும் வகையில் அன்பென்னும் சொல்லால் அவர்தம் அகங் குளிரச்செய்து, குடி என்னும் பண்பால் அவர்தமை மேன்மைப்படுத்தி, "குணம் எனும் குன்றேறி" யிருந்த அவர்கட்கு அவர்களே உவமையாயினர் என்றே என்னல் கூற முடிகிறது.

மக்கட் பேறு:

இவர்கள் தம் தவப்பேற்றால் அறிவறிந்த மக்கட் பேற்றைப் பெற்று, அவர்கள் தம்மை நல்வழியில் வளர்த்து பண்பும், பணிவும், ஈகையும், இரக்கமும், அன்பும், அறமும் அவர் தம் வாழ்வில் தமக்குப் பின்பும் குன்றா நிலையில் வளர வளர்த்து வந்தனர். அச்செல்வங்களுக்கு, திரு. பாலசுப்பிரமணியம், சரவணம், ஆறுமுகம், ஸ்ரீநிவாசன், தேவகி அம்மையார், சங்கரி அம்மையார், 'குழந்தையென விளையாடும் மதுரை' மீனாக்ஷி என்ற திருநாமும் ஒரு மகவுக்கிட்டு அகமகிழ்ந் தார்கள்.

நல்ல சம்மந்தம் :

தாமிருந்த இல்லத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்களின் வாரவழிபாடு, அடிகளாரின் திருநாளின்போது வடலூரில் அன்னமளித்தல், மாம்பாக்கம் குருகுலத் தொண்டு, திருக்கழுகுன்றம் மணிவாசகப் பெருமான் திருநக்ஷத்திரத்தன்று தொடங்கி ஒரு மூன்று நாள் பெருஞ் சோறளித்தல் முதலாய—அறப்பணிகளில் தங்குடித்தோன்றலான தம்மிளவல் உ. ப. இரத்தினவேலு முதலியார், தம் தமக்கை மகனார் திரு. ச. பாலசுப்பிரமணிய முதலியார், தம் இளவல் மகனார் இர. சண்முகம் முதலியார் முதலிய பெரு மக்களை ஒல்லும் வகையில் ஈடுபடும்படிச் செய்த, செய்து வருகிற, செய்யப் போகிற நல்வினையாளர் உண்டென்றால், அவர்கள் தான் திருவாளர் ச. கணேச முதலியாரும், அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி வள்ளியம்மையாரும் ஆவார்கள். அத்தகைய உயர்குடியிலே தோன்றியும், ஒரு குடிக்கு ஒரே மகனாக பிறந்தும் வளர்ந்த திரு. வேதாசல முதலியாருக்கு மேலே சிறந்த மக்களாகக் குறிப்பிட்ட பிள்ளைகளிலே திருவாட்டி தேவகி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டது "தாமரைத் தடாகத்தில் அன்னப் பறவைப் புகுந்துபோல" இரண்டு குடியும் ஓர் குடியாகியது என்று நினைக்க நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

அறப்பணிகள் :

திரு. முதலியார் அவர்கள் மனிதப் பிறவியிலே ஒரு தெய்வப் பிறவியாக விளங்கினாரென்பது அவர் செய்த அறப்பணிகள் எடுத்துக் காட்டும்மன்றோ! "தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய் நிகழ்ந்தார் என்பது அவர் வாழ்க்கை வரலாறு விளங்கக் காட்டுகிறது. திரு. முதலியார் அவர்கள் இரை தேடும்போது இறையையும் தேடு" என்ற வள்ளலார் வாக்கின்படி பசித்த முகத்தை பாராது, யாவராயினும் அவர்களுக்கு உணவளிக்க வேண்டுமென, "பசி நீக்குதலே பரமன் பூசை" என்ற வடலூர் வள்ளல் பெருமான் திருவாய் மொழிந்தபடி தைப்பூச திருவிழாவில் வடலூரிலும், தை கிருத்திகை திருவிழாவில் திருத்தணிகையிலும், தமிழர் திருவிழாவான பொங்கல் திருநாளில் பரிக்திபுத்தூரிலும் எண்ணற்ற ஏழைகளுக்கு உணவளிப்பதுமல்லாமல் ஆன்றோரின் சொற்பொழிவால் இறைவனையும் பணியும்படி செய்து வந்தார்.

தருமமிகு சென்னை கந்த கோட்டத்துப் பகுதியில் அமைந்த மாதர்ஜோதி பாராயண சபையின் வாரவழி பாட்டுக் கூட்டத்தை திரு. முதலியார் அவர்களே நடத்தி வந்தார். ஆண்டுதோறும் சபையின் ஆண்டு விழாவின்போது எண்ணற்ற நடமாடும் தெய்வங்களுக்குத் தனது 15-ஆம் எண்ணுள்ள தொழிலலுவலகத்தின் எதிரில் அமைந்த 27-ஆம் நெம்பர் இல்லத்தில் உணவளித்தமை இன்றும் நங்கண்முன்னே நின்று காட்சி அளிக்கின்றது. சென்னை ஏகாம்பரீஸ்வரர் கோயில் தேர்த் திருவிழாவும், கந்தசாமி கோயில் நிறைபணி திருவிழாவும், வள்ளிமலையில் பரமனுக்கு புஷ்பச்சாத்துப் படியும் செய்து வந்தார். சிவராத்திரி தினத்தன்று, மகிழங்கோட்டை ஞானசித்தி விநாயகருக்கு அபிடேக அலங்காரங்கள் செய்து வந்தார். திருவண்ணாமலை தீப உற்சவத்தின்போது துறவிகள் மாநாட்டில் கலந்துகொண்ட ஆன்றோர்களுக்கு அன்னதானம் செய்து வந்தார். விரிஞ்சிபுரத்தில் கடை ஞாயிறன்று ஆடிபூர உற்சவத்தில் ஸ்ரீ மார்க்கபந்து ஈஸ்வரரை தரிசிக்க வரும் அன்பர்களை உபசரித்து அனுப்புவது, அதனை அனுபவித்த பெருமக்களுக்கே அது தெரியும். வேலூர்—துறைப்பாடி பாலசுப்பிரமணிய சுவாமிகளுக்குப் பால் அபிடேசமும், சென்னை கந்தசாமி கோவில் துர்க்கையம்மனுக்குப் பால் அபிடேகமும், சென்னை சிந்தாதிரிப்பேட்டை அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கும், விசயவாடா கனகதுர்க்கையம்மனுக்கும் பெருவிழா செய்வித்ததும் நினைக்க எண்ணின் அவர் தமக்கு

எத்தனை அளவு அருளார்வம் மிகுந்து பொங்கி வழிந்ததென்பது புலனாகும். கலியுக வரதனான திருத்தணி முருகனுக்கு தை, ஆடி கிருத்திகைகளில் காவடி செலுத்தும் பக்தர்கள் செல்லுகின்ற வழிச் செலவிலமைந்த பரித்திபுத்தூரில் (திரு-முதலியார் பிறந்தவூரில்) சிரம பரிகாரம் (அன்னம், நீர், மோர் கொடுப்பது) செய்வித்து, கந்தனை வாழ்த்தி அவன் கருணையை வியந்து, வழிவிடுத்து மகிழா நிற்பார்.

என் கடன் பணி செய்து கிடப்பதே:

சூளை அவதானம் பாப்பையர் தெருவிலிருக்கும் ஸ்ரீராம பஜனை சபையில் ஸ்ரீராமநவமி உற்சவத்தையும், சூளை வீரசுப்பைய்ய சுவாமி மடத்தில் நடைபெறும் சங்கர ஜெயந்தி விழாவையும் வெகு உற்சாகமாக நடத்தி வந்தார். இதனால் இவர் சைவ, வைஷ்ணவ வேறு பாடின்றி சமத்துவ முக்கியத்துவம் தந்துள்ள சமரச சன்மார்க்க கொள்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். துளுவவேளாள சங்கத்தில் அங்கத்தினராக இருந்தும் பணியாற்றினார்.

கல்வித் தொண்டு:

தமிழகத்தில் கலைக்கோயில் ஒன்றைத் தோற்றுவித்து, அது தலை சிறந்து பணியாற்றும்படி உற்ற துணையாய் இருந்து வருபவரும், பள்ளிச் சிறாரும், ஆசிரியர்களும், அன்பர்களும், அறிஞர்களும், அரசியல் வல்லு நரும் அப்பா, அப்பா, என்றழைக்கும் சிறப்புப் பெயர் வாய்ந்த திரு. மாசிலாமணி முதலியார் அவர்களால் தோற்றுவித்த "இந்து மத பாட சாலையில் பயிலும் குழந்தைகளின் பால் பேரன்பு கொண்டு, அப்பள்ளி யில் தன்பேரில் வகுப்பறை ஒன்று கட்டிக் கொடுத்தும், அக்கலைக் கோயிலுக்கு அவ்வப்போது தன்னாலான உதவி செய்தும் கல்வித் துறையிலும் தனக்கு உடன்பாடு உண்டு என்பதை விளக்கிக் காட்டி யுள்ளார்.

உரிய நட்பு:

"இணக்க மறிந்திணங்கு" என்னும் முதுமொழிக்கேற்ப முதலியாரின் அவர்களின் பெருந்தகைக்கு உற்ற நண்பர்களாக சென்னை யில் பெரும் வாணிபம் புரியும் உயர்திரு ச. பாலசுப்பிரமணிய முதலியார் (Sole Proprietor, M/s. Spirit Ware House, Madras)

அவர்களும் சென்னை மேயர் கம்பெனி உரிமையாளரான உயர் திரு. ஆர். மாசிலாமணி முதலியார் அவர்களும் உடன்பிறந்தார்களைப்போல நட்பு பூண்டொழுகி வந்தார்கள்.

சான்றாண்மை :

பழகுவதில் எவரிடமும் வேறுபாடின்றி பழகுவார் ஆனாலும், தம்மைக் காட்டிலும் வயது வந்த மூத்தோராயின் மிகப் பணிவான முறையில் நாம் காண நடந்து கொண்ட முறை நமக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கி நிற்கிறது. திரு. முதலியார் அவர்கள் தன் கடைசி காலத்தும் மிகச் சிக்கலான நிலையிலும் தம் குடியின் வழிவந்தவரும், வயதில் மூத்தவருமான உ. ப. இரத்தினவேலு முதலியார் அவர்களிடத்து அவர் காட்டிய அன்பும், பெருமதிப்பும் அவர் தம் சான்றாண்மையை நமக்குத் தெளிவாக விளங்க வைக்கிறது.

தலயாத்திரை :

வாலாஜா காந்தி குருகுல மண்டபத்திற்கும், விரிஞ்சிபுரம் ஸ்ரீ மரகதாம்பிகை சமேத ஸ்ரீ மார்க்கபந்து ஈஸ்வரர் கோபுரத்திற்கும் மின்விளக்கு அமையச் செய்தார். முதலியார் அவர்கள் பொது வாழ்விலும், சமய வாழ்விலும் கல்விக்காகவும், தெய்வத்திற்காகவும் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்டது எம்மைப்போன்ற சாதாரண மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது. அன்னவர் தொடர்ச்சியாக (Pilgrimage) தமிழ் நாட்டு தெய்வத்திருத்தலங்களுக்குச்சென்று நீராடி, வழிபட்டு வந்ததோடல்லாமல், அடிக்கடி திருப்பதி, திருத்தணி, காளாஸ்தி, வள்ளிமலை,. விரிஞ்சிபுரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சிங்கபெருமாள் கோவில், மயிலம், குன்றத்தூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், சிதம்பரம், வடலூர், வில்லியனூர், ராமேஸ்ரம், பழனி, ஸ்ரீரங்கம், மதுரை, திருச்செந்தூர், சென்னையின் பகுதியான திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், முதலிய திருத்தலங்களை தரிசித்து வருவது அவரைத் தெரிந்தவர்கள் அறிந்த செய்தியாகும்.

நித்ய வழிபாடு :

தம் வாழ்வில் கடமையென திருவருள் துணைகொண்டு ஒவ்வொரு நாளும் இரவில் கந்தகோட்ட குமரனையும், ஏகாம்பரநாத சுவாமியையும் வழிபட்டு வீடு திரும்புவார். பிரதி சனிக்கிழமைகளில் மயிலாப்

பூரிலும் சௌக்கார்ப்பேட்டை பைராகிமடத்திலும் எழுந்தருளியிருக்கும் பக்த ஆஞ்சநேய சுவாமிகளை வழிபட்டு வருவார். திருத்தணிகை முருகன் திருக்கோயிலுக்கு அறநிலைய பாதுகாப்புக் கழகத்தார் நமது முதலியாரை அறக்காப்பாளராக அமைத்துக்கொண்டனர். எழும் போதும் "முருகா" என்பார். உண்ணும்போதும் முருகா! உறங்கும் போது முருகா! என்பார். இறுதி மூச்சு விடும்போதும் முருகா! முருகா!! என்றே அழைத்தார்.

இறுதி :

உயர்திரு. முதலியார் அவர்கள் ஆடி கிருத்திகைக்கு திருத்தணி சென்று இறை கடனாற்றி 1—8—59 அன்று சென்னை திரும்பினர். தம் வீடு புகுந்ததும் தம் அன்பார்ந்த வீட்டரசியாரோடு திருமுருகன் அழகைப் புகழ்ந்து புகழ்ந்து கூறி மகிழ்ந்து, அன்றிரவு தூங்கப் போகும் நேரத்தில் மார்பில் சிறிது வலி கண்டு "முருகா, முருகா" என்று கூறிக் கொண்டே முருகன் திருவடி நிழலை யடைந்தார்.

மேற்கூறியவாறு வாழ்நாளை வீணாக்காமல் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியாக இருந்த முதலியார் அவர்கள் என்றென்றும் கந்தப் பெருமான் திருவடிகளில் தங்கி வாழ்வாராக. அவர் தம்குடி மேலும் மேலும் வளர்ந்து வாழ வேண்டும் என்றும், எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன்.

முடிவுரை:

திரு நிறை செல்வன் பாலசுப்பிரமணியம் அவர்கள் தம் தந்தையார் விட்டுச்சென்ற வேலூர், ஐதராபாத், பெங்களூர், பெசவாடா முதலிய இடங்களில் உள்ள வாணிகக்கிளை நிலையங்களையும்; இவைகட்குத் தாயக மான சென்னை வாணிகத்தையும் செம்மையாக நடத்த உறுதுணையாக இருக்கும் தமது அன்னையாரையும், தமது சிறிய தந்தையார் திரு. கடிகாஜல முதலியாரையும் நினைக்கும்போது எப்போன்றோர் நினைக்க மகிழ்ச்சித்தருவதாக உள்ளது என்று பாராட்டுவதல்லாமல், தம் தந்தையார் ஆற்றிவந்த அறப்பணிகளையும் தன்னாலான மட்டிலும் ஆற்றி ஆன்றோர்கள் வாழ்த்துக்களை நிறையப்பெற்று வாழவேண்டும் என்று மற்றொரு முறையும் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

உ

அம்பாள் துணை.

அபிராமிபட்டர்

வரலாறு

தில்லை முதலிய எண்ணிறந்த சிவஸ்தலங்களைத் தன்கைத் துடைய சோழநாட்டிலே காவிரியாற்றின் தென்கரையிலுள்ளதும், தமக்குச் சிவபோதம் வேண்டும் என்று பிரார்த்தித்த பிரமதேவருக்குத் திருக்கைலாசபதி கொடுத்தருளிய மௌனவித்திலிருந்து உற்பவித்த தலவிருக்ஷமாகிய வில்வங் காரணமாக வில்வாரணியமென்னும் திரு நாமம் பெற்றதும், மார்க்கண்டேயமுனிவர் அமிர்தலிங்கத்தைப் பூசித்து யமனை வெற்றிகண்டது முதலாகிய அநேக விசேடங் களையுடைய திருக்கடவூரென்னுந் திவ்விய தலத்திலே ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்குமுன் ஒரு ஸ்மார்த்த வேதியரிடத்திலே தேவி திருவருளினால் ஒரு நன்மகன் தோன்றினார். அவர் இளமைப் பருவத்திலே தமிழ், வடமொழி என்னும் இருமொழிகளிலும் பலவகை நூல்களைக் கற்று, கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து, இசை வல்லராய், தேவியின்மேல் இராகமாலிகாகீர்த்தனம் பாடி, திருக்கடவூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அபிராமியம்மையாரிடத்துப் பக்தி மிகுந்து, அவரை நாடோறும் முறையாகச் சென்று வழிபட்டும் ஆன்மார்த்தமாகவும் வழிபட்டுவந்தார்.

அவர் அபிராமிதேவியின்மீது வைத்த மெய்யன்பை உள்ளபடி அறியாமல், அத்தேவியை ஆன்மார்த்தமாக வழிபட்டு வருதலை அறிந்த ஸ்மார்த்த வேதியர் சிலர் * "இவர் பரிவாரதேவதா சத்திபூசைசெய்து வருகின்றார்" எனத் திரித்துணர்ந்து அவர்மேற் பகைபாராட்டி, தை

---

* இவர் பரிவார்தேவதாசத்திபூசை செய்தாரல்லர் என்பது, "வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டு கொண்டேன்" (64)

"அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை" (81)

என்றற்றொடக்கத்தனவாக இவர்கூறிய செய்யுள்களால் இனிது விளங்கும்.

யமாவாசையிலே காவேரிசங்கமஸ்நானஞ் செய்து திருக்கடவூரில் வந்து தங்கிய தஞ்சைச் சரபோஜிமகாராஜாவைக் கண்டு, இந்நூலாசிரியர் மாட்டுத் தமக்கிருக்கும் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அரசன் அதனைக்கேட்டு அவ்வாசிரியரை வருவித்து, "இன்று புச்ச அமாவாசை எத்தனை நாழிகை வரையில் இருக்கின்றது" என்று உபாயமாக வினவ, தேவியுபாசனானந்தத்தில் ஆழ்ந்திருந்த † அவர் " இன்று பௌர்ணிமி திதியல்லவா" என்று நிதானந்தவறி விடைகூறினர். அதனை அரசன் கேட்டு, இவர்மீது வேதியர் கூறிய குற்றம் உண்மையேயாம் என்று தன்னுள் நிச்சயித்துக் கொண்டு, இனக்குறிப்போடும் "நீர் போம் என்றனுப்பிவிட்டான்.

தமதுறைவிடத்தை யடைந்த ஆசிரியர், தாம் அரசன் முன்னே திதியை நிதானந்தவறிக் கூறினமை பின்பு தேவி திருவருளினலே தமதுள்ளத்துத் தோன்றுதலும், "என்னுயிர்த்துணையாகிய அபிராமி தேவியே இத்தவற்றினின்றும் எம்மைக் காத்தருளுவள்" என்ற பற்றோடு, அத்தேவி சந்நிதியிற்போய் மெய்யன்போடு வணங்கி, "மகா தேவியே" முன் என்னுள்ளத்தைப் பேதித்த தேவரீரே இப்பொழுதும் தமியேனை அரசனுக்குக் கூறிய சொற்சோர்வினின்றும் பாதுகாக்கவேண்டும்" என்று பிரார்த்தித்து, ஒருவகை அரிகண்டம் பாடத்தொடங்கி, தேவி சந்நிதியில் ஒருகசநீளமும் அகலமும் ஆழமுமுள்ள ஒரு குழி அகழ்ந்து அதில் அக்கினியைச் சுவாலிப்பித்து அக்குழியின் நான்கு திக்கினும் நாட்டிய இருப்புக்கால்களின் மேல் இருப்புக்கம்பிகளினல் விட்டம் பூட்டி அவற்றில் நூறு கயிறுகளைமாட்டித் தொங்கவிட்டு உறியாகப்பின்னி, அவ்வுறியின்மேல் தாம் இருந்துகொண்டு, "அபிராமி தேவி நமக்கு நேரே எழுந்தருளிவந்து காட்சி தந்தருளாதொழியின், இத்தீக்குழியில் வீழ்ந்து பிராணத்தியாகஞ் செய்து விடுவேம்" என்று கடைப்பிடித்து, அத்தேவி தமக்கு நேரே காட்சிதந்தருளல் வேண்டும் என்னுங் கருத்தால் "உதிக்கின்ற" என்னுஞ் சொல்லை முதலில் வைத்து இவ்வந்தாதியைப் பாட ஆரம்பித்து, அபிராமிதேவி பிரசன்ன மாகாமையின், ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் உறியின் ஒவ்வொரு கயிற்றை அரிந்துகொண்டு வந்தார்.

---

† இவர் தேவியுபாசனானந்தமேலீடு.

" விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றால்அபி ராமி சமயநன்றே "

என்னுஞ் செய்யுளால் அறிக.

இங்ஙனம் பாடிக்கொண்டு வரும்பொழுது "விழிக்கே யருளுண்டு" என்னும் எழுபத்தொன்பதாவது பாடல்பாடி முடிந்தவுடன் அபிராமிதேவி அவருக்குப் பிரசன்னமாகி அருள்புரிந்து, தமது திருத்தோடு ஒன்றைக் கழற்றி ஆகாயத்தில் வீசியருளி, "அன்பனே! நீ அரசனுக்குக் கூறிய வார்த்தையை மெய்யாக்கிவிட்டோம்; உன் கவலையை யொழி; நீ நம்மீது மெய்யன்போடு பாடிய இவ்வந்தாதியை நாம் உவந்து ஏற்றுக்கொண்டோம்; நீ முடிவில் நம்முடைய திருவடியை அடைவாய், இவ்வந்தாதியை மெய்யன்போடு பாராயணஞ்செய்பவர், பொருள் சொல்லுபவர், கேட்பவர் ஆகிய இவர்கள் யாவரும் இம்மை மறுமைகளில் வேண்டிய வேண்டியாங்கு இன்பம் அநுபவித்துப் பின்பு வீடு பேற்றையடைவார்கள் என்று நீ இவ்வந்தாதியிலமைத்துப் பாடியபடி ஆகுக" என்று வாழ்த்தி மறைந்தருளினர்.

ஆசிரியர் அம்மையாரைக் காணாது கலங்கி அவர் மறைந்த திக்கை நோக்கி வணங்கி, "கூட்டியவா வென்னை" என்னும் எண்பதாவது பாட்டிலே தேவி தமக்கு அருள் செய்த திறத்தை அமைத்தும், மற்றைப் பாடல்களிலே தேவி இதற்குமுன் தமக்கு திருவடி தீக்ஷை செய்தமை முதலிய அரும்பெரும் விஷயங்களை அமைத்தும் எஞ்சிய கயிறுகளை அரியாது எஞ்சிய பாடல்களைப்பாடி நூலை முடித்து, தமது உறைவிடத்தை யடைந்தனர்.

அற்றைச் சூரியாஸ்தமானகாலத்திலே தேவி ஆகாயத்தில் வீசிய திருத்தோடானது அநேக சந்திரர் ஒருங்கு திரண்டுதித்தாற்போல உதித்தலும், அதனைக்கண்ட சரபோஜி மகாராஜா முதலாயினோர் "பூர்வபக்கப் பிரதமையிற் பூரண சந்திரோதயப் பிரகாசம் உண்டாயிற்று. இஃதென்னை அற்புதம்! அற்புதம்!!" என்று பேராச்சரியமுற்றுப் பின்பு "இது அபிராமியம்மை தமதடியவர் வாக்கைப் பாதுகாக்கும்பொருட்டுச் செய்தருளிய பெருங்கருணைத் திறமேயாம்" என்று துணிந்தனர். உடனே அரசன் "தேவியின் மெய்யடியாரது பெருந்தன்மையை யறியாமல் அவமதித்தோமே, இனி இப்பெருங்கொடும் பாவத்துக்கு என்ன பிராயச்சித்தஞ் செய்வது" என்று கருதித் தன்னை நொந்து உள்ளமும் சரீரமும் நடுநடுங்க ஓடிவந்து ஆசிரியரைக் கண்டு விழுந்து வணங்கி, "அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று பலமுறை இறைஞ்சி நிற்க, அவர் அரசனை ஆசிர்வதித்து, "தேவி திருவருள் உன்னாலும் என்னாலும் அறியத்தக்கதா" என்று கூறி, அவனுக்கு அருள்புரிந்தனர். அவன் "இன்று முதலாகத் தங்களுக்கு, "அபிராமிபட்டர் எனத் திருநாமம் வழங்குக" என்றூர்,

அடியேனுடைய உபகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்" என்றும் வேண்டினன். அபிராமிபட்டர் "நமக்கு அபிராமிதேவியினுடைய திருவருளை அன்றியும் மற்றொன்றும் வேண்டுவதில்லை" என மறுக்க, பின்னும் அரசன் அதிவிநயத்துடன் "தங்கள் சந்ததியார் பொருட்டாவது இதற்குத் தாங்கள் உடன்பட்டருளல் வேண்டும்" என்று மிகவும் பிரார்த்தித்தான். அதற்கு அவர் மனமிரங்கி ஒருவாறு உடன்படலும் அரசன் இந்தக் கிராமத்திலும் சுற்றுக் கிராமங்களிலும் ஆண்டு ஒன்றுக்கு வேலிக்கு என்ணாழி நெல்லு அவர் சந்ததியாருக்குக் கொடுக்கும்படி உத்தரவளித்து, அவரை மீண்டும் நமஸ்கரித்து, ஆசீர்வதிக்கப்பெற்றுத் தன் தலை நகரை யடைந்தான். அபிராமிபட்டருடைய பின் தோன்றல்கள் அவ்வரசன் அன்போடளித்த மானியத்தை இன்னும் பெற்றுக் கொண்டு வருகின்றனர். அதுநிற்க.

அபிராமிபட்டர் அபிராமிதேவியை முன்னையினும் மிக்க சிரத்தையுடன் வழிபட்டு ஆன்மார்த்தமாகவும் பூசித்து அநுபூதிமானாகி, சில காலத்தின்பின் அத்தேவியினுடைய திருவடிநீழலை அடைந்தருளினர். இவர் இன்னுஞ் சில அற்புதங்களைச் செய்தார்என்பது கர்ணபாரம்பரியம் அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

உ

அபிராமிபட்டர் அருளிச்செய்த

அபிராமியந்தாதி

காப்பு

கட்டளைக்கலித்துறை.

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 5

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்தூர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்தூர வண்ணத்தி னாண்மகிடன் றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே. 8

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 9

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன் செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான ததிசயமே. 16

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
அதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோவென்றனெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 23

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண்டேன் முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே. 25

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும் படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
னாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பதும பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாம்நின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியு ளுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண்டாய் கொண்ட தல்லவென்கை
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட்
சென்றே விழினுங் கரையேற் றுகையுன் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. 31

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்படி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 34

திங்கட் பகவின் மணநாறுஞ் சீரடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 36

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 37

பவளக் கொடியிற் பழுத்த செவ்வாயும் பணிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்பு லொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சாற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றோமுன்செய் புண்ணியமே. 40

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்கள்நடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய டீமைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் பச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்து வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரண்நமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 51

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பொன்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 55

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவர்
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 56

ஐப னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமுஞ்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே. 66

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
ஊரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பாதாம்புயத் தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங்கே லுனக் கென்குறையே. 71

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன் சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக் ஞான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே. 74

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்திநின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப்பி ரானொரு கூற்றை மெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
குபிரவி புண்ணி யுயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே. 78

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. 80

அணங்கே யணங்குக ளின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகி லேனெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
னொளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுந்தொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. 82

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கர்பகக் காவு முடையவரே. 83

உடையாளை யொல்குசெம் பட்டுடை யாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. 85

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளப் பெறுத்தரி யாதவுணர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன் று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. 94

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 95

சோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேத மிலாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 96

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையைப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சி லெப்போது முதிக்கின்றவே. 100

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத் தொழு வார்க்கொரு தீங்கில்லையே. 101

INDIA PRESS, MADRAS-7.